(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **69.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 ஏப்ரல் 20 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** கல்வி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** சுகாதார அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் நிவாட் கப்ரால்,** நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டிரான் அலஸ்**

**கௌரவ நஸீர் அஹமட்**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ ஜகத் குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திரண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ ஹரின் பிரனாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி

கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ ஜோன் செனவிரத்ன

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்*:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதினாறு மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**II**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2017 ஆம் ஆண்டுக்கான உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை நிதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நெடுஞ்சாலைகள் அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிதி அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கயைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ஆயுள்வேத மருத்துகள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iii) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான ஆயுள்வேத வைத்திய சபையின் வருடாந்த அறிக்கைகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பெருந்தோட்ட அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேயிலைச் சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2018 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான சட்டமா அதிபதி திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம்;

(ii) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான விதிமுறைகள்;

(iii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்; மற்றும்

(iv) (52 ஆம் அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) எத்கந்துர, கீனகெடிய எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ. டீ. எஸ். கீர்த்திரத்னவின் 2021.01.20 திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்திம வீரக்கொடி சமர்ப்பித்தார்.

(2) (i) ரத்கம, பள்ளியபிடிய, "துஸித" எனும் முகவரியில் வதியும் திரு. தேமினி அசோக சோமகீர்த்தியின் 2021.02.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும் ;

(ii) தல்கஸ்வெல, நியாகம, குருபெபில எனும் முகவரியில் வதியும் திரு. ஜே.ஏ. தமித் குமாரவின் 2020.12.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும் ;

(iii) காலி, வக்வெல்ல, ஹபுகல, யுனிவல்சல்சிடி, இல. 229 இல் வதியும் திரு. ஜே. கே. அமரவர்தனவின் 2020.12.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) காலி, தடல்ல,கொழும்பு வீதி, இல. 288/2 எனும் முகவரியில் வதியும் திரு. ஜே.ஏ. தமித் குமாரவின் 2020.01.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும் ;

கௌரவ மனுஷ நாணயக்கார சமர்ப்பித்தார்.

(3) விஜேபுர, பண்டாரநாயக்க மாவத்தை, இல. 530 எனும் முகவரியில் வதியும் திருமதி பீ. எச்.ஏ. திஸாநாயக்கவின் 2021.01.20 திகதியிடப்பட்ட மனுவை கௌரவ உத்திக பிரேமரத்ன சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30( 10 ) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்ற சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 8 ஆம் இலக்கங்கள் வரையான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ( இல. 1 ):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மு.ப 11.20 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (திருமதி) றோஹிணி குமார விஜேரத்ன தலைமை தாங்குவாராக" என கௌரவ ஹரின் பர்னாந்து முன்மொழிய கௌரவ மனுஷ நாணாயக்கார வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 1.30 மணிக்கு கௌரவ (திருமதி) றோஹிணி குமார விஜேரத்ன தலைமை தாங்கினார்.)

“கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் தலைமை தாங்குவாராக” என மின்சக்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.03 மணிக்கு கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் தலைமை தாங்கினார்.)

“கௌரவ வீரசுமன வீரசிங்ஹ தலைமை தாங்குவாராக” வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.48 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்ஹ தலைமை தாங்கினார்.)

**7. அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 5, 7 மற்றும் 8 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம்

பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/38 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 8 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமை முறைமை தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 01 ஆந் திகதிய 2208/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2021)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 01 ஆந் திகதிய 2208/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2021)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 11 ஆம் திகதிய 2214/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. ஒத்திவைப்பு (சிறீ ஜயவர்த்தனபுர தலைநகரின் நகர எல்லைப் பிரச்சினை):** இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் தலைமை தாங்குவாராக" என கௌரவ சாந்த பண்டார முன்மொழிய கௌரவ மதுர விதானகே வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.48 மணிக்கு கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் தலைமை தாங்கினார்.)

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே தலைமை தாங்கும் உறுப்பினர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2021 ஏப்ரல் 21 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.